இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பொலிசு ஆணைக்குழுக்கள் சட்டம்

[1990, சனவரி மாதம் 23 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1990 சனவரி 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 தபாற் செலவு : ரூபா 1.00

## 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பொலிசு ஆணைக்குழுக்கள் சட்டம்

*[1990 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*ச. வ ஓ—22/89*

**தேசிய பொலிசு ஆணைக்குழு ஒன்றைத் தாபிப்பதற்கும், ஒவ்வொரு மாகாணத்திற்குமான மாகாணப் பொலிசு ஆணைக்குழு ஒன்றைத் தாபிப்பதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்குவரும் தேதியும்.**

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பொலிசு ஆணைக்குழுக்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதி நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**தேசிய பொலிசு ஆணைக்குழு.**

2. (1) பின்வருவோரைக்கொண்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும் :—

(அ) ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்படவேண்டியவரான பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ;

(ஆ) சனாதிபதியின் கலந்தாலோசனையுடன் பகிரங்கசேவை ஆணைக்குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஓர் ஆள் ; அத்துடன்

(இ) பிரதம நீதியரசரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் ஆள்.

(2) ஆள் எவரும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, மாகாணசபை உறுப்பினர் ஒருவராக, அல்லது ஓர் உள்ளூரதிகாரசபை உறுப்பினர் ஒருவராக இருந்தால், அவர் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராகப் பெயர்குறித்து நியமிக்கப்படுதலோ அல்லது தொடர்ந்திருந்து வருதலோ ஆகாது.

(3) ஆணைக்குழுவில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் அவரது கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற முடியாதிருக்குமிடத்து, பெயர்குறித்து நியமிக்கும் அதிகார சபையானது அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், விடயத்திற்கேற்றுற்போல் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு அல்லது பிரதம நீதியரசருக்கு முகவரியிடப்பட்டுத் தன் கைப்பட எழுதுவதன்மூலம் முன்னதாகவே தமது பதவியினின்றும் விலகிக்கொண்டாலொழிய, அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள்கொண்ட ஒரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக் குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவ ராகப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குமுன் பகிரங்க அலுவலர் ஒரு வராக அல்லது நீதித்துறை அலுவலர் ஒருவராக இருந்திருந்தால், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய பதவியை வகிக்கா தொழிதல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவ ராக அவர் இருக்கும் அக் காலம்வரையில் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் என்றவகையில் அவருடைய பணிகளை நிறைவேற்றுவதைப் பங்கமாகப் பாதிக்கக்கூடிய ஏதேனும் தொழில் முயற்சியில் உயர் தொழிலில், வியாபாரத்தில் அல்லது தொழிலில் ஈடுபடாதொழிதலும் வேண்டும்.

(6) தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்குப் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படி வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர் எவருக்கேனும் வழங் கப்படக்கூடியதான படியானது, திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பாகக் கப்படவேண்டுமென்பதுடன், அவருடைய பதவிக்காலத்தின்போது அது குறைக்கப்படுதலும் ஆகாது.

(7) ஆணைக்குழுவால் நியமிக்கப்படவேண்டிய ஒரு செயலாளர் தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு இருத்தல் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் இரண்டு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(9) எட்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தேசிய பொலிசு ஆணைக்குழுவானது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடம் இருப்பது எவ்வாறிருப்பினும், செயற்படுவதற்குத் தத்துவம் கொண்ட தாயிருத்தல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அத்தகைய ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணத்தால் அல்லது ஓர் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணத்தால் செல்லுபடியற்றதாதல் ஆகாது அல்லது செல்லுபடியாற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

(10) தண்டனைச் சட்டக்கோவையின் IX அத்தியாயத்தின் நோக் கத்திற்காக, தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பகி ரங்க சேவையாளர் ஒருவராக கருதப்படுதல் வேண்டும்.

**தேசிய பகுதியின் அலுவலர்களை நியமித்தல் ஆணைக்குழு விற்கு உரித் தாக்கப்படல்.**

3. அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலுக் கான I ஆம் பின்னிணைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைப் பொலிசுப் படையில் தேசிய பகுதிக்கான பொலிசு அலுவலர்களின் நியமனம், இட மாற்றம், பதவி விலக்கல் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன தேசிய பொலிசு ஆணைக்குழுவிற்கு இத்தால் உரித்தாக்கப்படுகின்றன.

4. தேசிய பொலிசு ஆணைக்குழுவானது இலங்கைப் பொலிசுப் படையின் தேசிய பகுதியைச் சேர்ந்த அலுவலர்களின் இடமாற்றம், பதவி விலக்கல் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமாக அதற்குள்ள தத்துவங்களுள் எதனையும் தேசிய பகுதியின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

**தத்துவங்களைக் கையளித்தல்.**

5. தேசிய பொலிசு ஆணைக்குழுவானது பின்வரும் விடயங்களுக்கு ஏற்பாடுசெய்தலும் அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும் :—

**தேசிய பொலிசு ஆணைக்குழுவின் பணிகள்.**

(அ) இலங்கைப் பொலிசுப் படையின் தேசிய மற்றும் மாகாணப் பகுதிகளின் அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் நடத்தைக்கோவைகளையும் வகுத்தமைப்பது தொடர்பிலான எல்லாக் கருமங்களும் ;

(ஆ) (மாகாணப் பகுதியிலிருந்து தேசிய பகுதிக்கான பதவி உயர்வுகள் உட்பட) அப்பகுதிகளுக்குள் அல்லது அப்பகுதிகளுக்கிடையே பதவி உயர்வுகளையும் இடமாற்றங்களையும் செய்வதில் பின்பற்றப்படவேண்டிய நெறிகள் தொடர்பிலான எல்லாக் கருமங்களும், அத்துடன் இலங்கைப் பொலிசு படையில் ஒரே சீரான தாரதரங்களைப் பேணும் நோக்கில் பதவி உயர்வுக்குத் தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பதவிவரிசையையும் சேர்ந்த அலுவலர்களால் எய்தப்படவேண்டிய தாரதரங்களும் ;

(இ) இலங்கைப் பொலிசுப் படையின் தேசிய பகுதியின் பொலிசு அலுவலர்களது நியமனம், பதவி விலக்கல் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமாக அதற்குள்ள தத்துவங்களைப் புரிவதற்கான அத்துடன் கையளிப்பதற்கான நடைமுறை தொடர்பிலான எல்லாக் கருமங்களும் ;

(ஈ) இலங்கைப் பொலிசுப் படையின் தேசிய பகுதியின் பல்வேறு பதவிவரிசைகளைச் சார்ந்தோர் கொண்டுசெல்லக்கூடிய சுடுபடைக்கலங்கள், வெடி மருந்து அத்துடன் சாதனம் என்பவற்றின் தன்மையும், வகையும், அளவும் ;

(உ) மாகாணப் பொலிசு ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பின்னர், இலங்கை பொலிசு படையின் மாகாணப் பகுதியைச் சேர்ந்த பல்வேறு பதவிவரிசைகளைச் சார்ந்தோர் கொண்டு செல்லக்கூடிய சுடுபடைக்கலங்கள் அத்துடன் வெடிமருந்து என்பவற்றின் தன்மையும், வகையும், அளவும்.

6. (1) தேசிய பகுதியின் எல்லாப் பதவி வரிசைகளையும் சார்ந்த பொலிசு அலுவலர்களின் ஊழியர் கோப்புகள், இலங்கை அரசாங்கத்தினால் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கப்படல் வேண்டும். மாகாணப் பகுதி ஒவ்வொன்றினதும் அலுவலர்களி

**பொலிசு அலுவலர்களின் ஊழியர் கோப்புகளும் பயிற்சியும்.**

னது ஊழியர் கோப்புகளும் வேறு பதவி வரிசைகளும், பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு, சனாதிபதியின் அங்கீகாரத்துடன் மாகாண நிருவாகத்தினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) மாகாணத்தின் இடப்பரப்பு ;

(ஆ) மாகாணத்தின் குடிசனம் ; அத்துடன்

(இ) உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறான அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு மூலப் பிரமாணம்.

இத்தத்துவங்கள் ஒரு சீராக எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) மாகாணப் பகுதியின் ஊழியர் கோப்புகளாவன, குடிசனம், இடப்பரப்பு, சம்பந்தப்பட்ட பொலிசு நிலையங்களின் எண்ணிக்கை அத்துடன் இயைபான வேறு விடயங்கள்போன்ற ஆய்ந்தறியப்பட்ட கோட்பாடுகளின்மீது நிர்ணயிக்கபபடுதல் வேண்டும். இக்கோட்பாடுகள் பாகுபாடின்றி எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) தேசிய மாகாணப் பகுதிகளில் பல்வேறு பதவி வரிசைகளாலும் துய்க்கப்படும் சம்பள விகிதங்களும் பதவிக்குரிய கிடை ஆதாயங்களும் மாகாணங்களின் பிரதான அமைச்சர்களுடனான கலந்தாலோசனையின் பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். மாகாணப் பகுதிகளின் உறுப்பினர்களால் துய்க்கப்படும் சம்பள விகிதங்களும் பதவிக்குரிய கிடை ஆதாயங்களும் சீராக எல்லா மாகாணப் பகுதிகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இலங்கை அரசாங்கமானது, தேசிய பொலிசு ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன், இலங்கைப் பொலிசுப் படையின் தேசிய மற்றும் மாகாணப் பகுதிகளினதும் எல்லாச் சேராள்களினதும் பயிற்சிக்குப் பொறுப்புடையதாயிருத்தல் வேண்டும். சனாதிபதி, அவர், அவசியமானதெனக் கருதுகின்றவிடத்து, ஏதேனும் மாகாணப் பகுதியின் உறுப்பினர்களுக்கான மாற்று வகையான பயிற்சிக்கு ஏற்பாடு செய்யலாம்.

மேன்முறையீடு.

7. நாலாம் பிரிவின்கீழ் தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் அதன் தத்துவங்கள் எந்தத் தேசிய பகுதி அலுவலருக்கு கையளிக்கப்பட்டுள்ளனவோ அந்தத் தேசிய பகுதி அலுவலரால் செய்யப்பட்ட ஏதேனும் இடமாற்று அல்லது பதவிவிலக்கல் கட்டளையினால் அல்லது ஒழுக்காற்றுக் கருமம் தொடர்பிலான வேறு ஏதேனும் கட்டளையினால் இடருற்ற எவரேனும் பொலிசு அலுவலர் தேசிய பொலிசு ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யு[illegible] வேண்டும் :

ஆயின், மாகாணப் பொலிசு ஆணைக்குழுவினால் ஏதேனும் மாகாணப் பகுதிக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்ட தேசிய பகுதியின் எந்த அலுவலருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அந்த மாகாணப் பகுதிக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்ட தேசிய பகுதியின் எவரேனும் அலுவலர், தேசிய பொலிசு ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யும் உரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும். மேன்முறையீட்டின்மீதான அதனது முடிவு இறுதியானதாதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது தேசிய பொலிசு ஆணைக்குழுவானது மாகாணப் பொலிசு ஆணைக்குழுவின் கட்டளையை வேறுபடுத்துவதற்கு அல்லது நீக்குவதற்குத் தத்துவம் உடையதாதல் வேண்டும்.

**மேன்முறையீட்டின்மீது ஆணைக்குழுவுக்குள்ள தத்துவங்கள்.**

8. நாலாம் பிரிவின்கீழ் தேசிய பொசு ஆணைக்குழு ஒன்றால் அதன் தத்துவங்கள் எந்தத் தேசிய பகுதி அலுவலருக்குக் கையளிக்கப்பட்டுள்ளனவோ அந்தத் தேசிய பகுதி அலுவலரால் செய்யப்பட்ட ஏதேனும் இடமாற்றம் அல்லது பதவி விலக்கல் கட்டளையை அல்லது ஓர் ஒழுக்காற்றுக் கருமம் தொடர்பிலான வேறு கட்டளையை வேறுபடுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு தேசிய பொலிசு ஆணைக்குழுவிற்குத் தத்துவம் இருத்தல் வேண்டும்.

**மாகாணப் பொலிசு ஆணைக்குழுக்கள்.**

9. (1) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதியால் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதி தொடக்கம் ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாணப் பொலிசு ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். வெவ்வேறு மாகாணங்கள் தொடர்பாக வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்.

(2) ஒரு மாகாணத்தின் மாகாணப் பொலிசு ஆணைக்குழு பின்வருபவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதி (இவர் ஆணைக்குழுவின் தவிசாளராகச் செயற்படுதல் வேண்டும்);

(ஆ) சனாதிபதியுடனான கலந்தாலோசனையுடன் பகிரங்க சேவை ஆணைக்குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் ஆள் ;

(இ) அம்மாகாணத்தின் பிரதான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் ஆள்.

(3) ஆணைக்குழுவின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் அவரது கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற முடியாதிருக்குமிடத்து, பெயர்குறித்து நியமிக்கும் அதிகாரசபையானது அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(4) ஆள் எவரும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, மாகாணசபை உறுப்பினர் ஒருவராக அல்லது ஓர் உள்ளூரதிகாரசபை உறுப்பினர் ஒருவராக இருந்தால், அவர் மாகாணப் பொலிசு ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராகப் பெயர்குறித்து நியமிக்கப்படுதலோ அல்லது அத்தகைய உறுப்பினராகத் தொடர்ந்திருந்து வருதலோ ஆகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மாகாணப் பொலிசு ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், விடயத்திற்கேற்றுற் போல பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு அல்லது பிரதான அமைச்ச ருக்கு முகவரியிடப்பட்டுத் தன் கைப்பட எழுதுவதன் மூலம் முன்ன தாகவே தமது பதவியினின்றும் விலகிக்கொண்டாலொழிய, அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு கொண்ட ஒரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மாகாணப் பொலிசு ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராகப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு முன் பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லது நீதித்துறை அலுவலர் ஒருவராக இருந் திருந்தால் அல்லது மாகாணப் பகிரங்கசேவையில் பதவி வகித்திருந் தால், பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அவர் அத்தகைய பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக அவர் இருக்கும் அக்காலவரையில் அத்தகைய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் என்றவகையில் அவருடைய பணி களை நிறைவேற்றுவதைப் பங்கமாகப் பாதிக்கக்கூடிய ஏதேனும் தொழில் முயற்சியில் உயர் தொழிலில் வியாபாரத்தில் அல்லது தொழிலில் ஈடுபடா தொழிதலும் வேண்டும்.

(7) மாகாணப் பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு அந்த மாகாணத்தின் மாகாண சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படி வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர் எவ ருக்கேனும் வழங்கப்படக்கூடியதான படியானது மாகாணத்தின் மாகாண நிதியத்தின்மீது பொறுப்பாக்கப்படல் வேண்டும் என்பதுடன் அவரது பதவிக்காலத்தின்போது அது குறைக்கப்படுதலும் ஆகாது.

(8) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட வேண்டிய செயலாளர் ஒருவர் ஒவ்வொரு மாகாணப் பொலிசு ஆணைக்குழுவுக்கும் இருத்தல் வேண்டும்.

(9) மாகாணப் பொலிசு ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் இரண்டு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(10) ஒன்பதாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மாகாணப் பொலிசு ஆணைக்குழு ஒன்று அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றி டம் இருப்பது எது எவ்வாறிருப்பினும் செயற்படுவதற்குத் தத்துவம் கொண்டதாயிருத்தல் வேண்டும். அத்துடன் ஏதேனும் அத்தகைய ஆணைக் குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அத்தகைய ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக அல்லது ஓர் உறுப்பினரின் நியமனத் தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக செல்லுபடியற்றதாதல் ஆகாது அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

(11) தண்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் நோக் கங்களுக்காக மாகாணப் பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

10. அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலுக்கான I ஆம் பின்னிணைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பொலிசுக் கண்காணிப்பாளர் மாகாண உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர், பிரதான பரிசோதகர்கள் பரிசோதகர்கள், உதவிப் பரிசோதகர்கள், சார்ஜன்ட் அத்துடன் பொலிசுக் கொஸ்தாப்புக்கள் ஆகிய பதவிவரிசையில் உள்ள மாகாணமொன்றின் மாகாணப் பகுதியின் அலுவலர்களினதும் மாகாணப் பகுதிக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்ட தேசிய பகுதியின் அலுவலர்களினதும் நியமனம், இடமாற்றம், பதவி விலக்கல் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன அந்த மாகாணத்தின் மாகாணப் பொலிசு ஆணைக்குழுவிடம் இத்தால் உரித்தாக்கப்படுகின்றது.

மாகாணப் பொலிசு ஆணைக் குழுக்களுக்குள்ள தத்துவங்கள்.

11. (1) மாகாண பொலிசு ஆணைக்குழு, அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அதன் தத்துவங்களுள் அத்தகையனவற்றை அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆளுக்கு அல்லது அதிகாரிக்கு கையளிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

கையளித்தல்.

(2) எந்த அலுவலருக்கு அந்த மாகாணத்தின் மாகாணப் பொலிசு ஆணைக்குழுவின் தத்துவங்கள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கையளிக்கப்படுகின்றனவோ அந்த அலுவலரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் இடமாற்றக் கட்டளையினால் அல்லது பதவிவிலக்கல் கட்டளையினால் அல்லது ஒழுக்காற்றுவிடயம் தொடர்பான வேறு ஏதேனும் கட்டளையினால் இடருற்றவரான மாகாணத்தின் மாகாணப் பகுதியொன்றின் எவரேனும் அலுவலர், அத்தகைய மாகாணப் பொலிசு ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. எந்த ஆள், அவரது கடமையின்போது அல்லது வேறு வகையில் நேரடியாக அல்லது மறைமுகமாக அவராக அல்லது வேறு எவரேனும் ஆள் மூலமாக எத்தன்மைத்தான எம்முறையிலும், தேசிய பொலிசு ஆணைக்குழுவின் அல்லது மாகாணப் பொலிசு ஆணைக்குழுவின் அல்லது அத்தகைய ஏதேனும் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரின் ஏதேனும் முடிவைச் செல்வாக்குக்குட்படுத்துகின்றாரோ அல்லது செல்வாக்குக்குட்படுத்த எத்தனிக்கின்றாரோ அந்த ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் யூரி இல்லாத விளக்கத்தின் பின்னர் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தேசிய அல்லது மாகாணப் பொலிசு ஆணைக்குழுவில் இடையீடு செய்தல்.

13. (1) இலங்கைப் பொலிசு படையின் மாகாணப்பகுதி ஒன்று, மாகாணத்திற்குள்ளாக, அரசியல் அமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலுக்கான I ஆம் பின்னிணைப்பின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தவிர்ந்த, எல்லாத் தவறுகளையும் தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும், அத்துடன் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவைச் சட்டத்தின்கீழ் சட்டத்துறைத் தலைமை அதிபதியின் தத்துவங்களுக்கு அமைவாக அத்தகைய தவறுகள் தொடர்பாக இயைபான நீதிமன்றங்களில் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் பொறுப்புடையதாதல் வேண்டும்.

தவறுகளைப் புலனாய்வு செய்தல்.

ஆயின் அத்தகைய ஏதேனும் தவறு—

(அ) அத்தகைய தவறுபற்றிய விசாரணை தேசிய பகுதியினால் நடாத்தப்பட வேண்டுமென மாகாணத்தின் பிரதான அமைச்சர் வேண்டிக்கொள்ளுமிடத்து ; அல்லது

(ஆ) தேசிய பகுதியினால் அத்தகைய தவறு புலனாய்வு செய்யப்படுவது பொதுநலனுக்கு அவசியமானது என பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அபிப்பிராயப்பட்டு, மாகாணத்தின் பிரதான அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர், சட்டத்துறை தலைமை அதிபதியின் அங்கீகாரத்துடன் தேசிய பகுதியினால் அத்தகைய தவறு விசாரணை செய்யப்பட வேண்டுமெனப் பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதி பணிக்கின்றவிடத்து,

இலங்கைத் தேசிய பொலிசின் தேசிய பகுதியினால் புலனாய்வு செய்யப்படலாம்.

(2) இலங்கைப் பொலிசுப் படையின் தேசிய பகுதி அரசியல் அமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலுக்கான பின்னிணைப்பு I இன் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எல்லாத் தவறுகளையும் தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்கும் அத்துடன் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின்கீழ் சட்டத்துறைத் தலைமை அதிபதிக்குள்ள தத்துவங்களுக்கமைவாக, அத்தகைய தவறுகள் தொடர்பில் இயைபான நீதிமன்றங்களில் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் பொறுப்புடையதாதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலுக்கான பின்னிணைப்பு I இன் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்று தவிர்ந்த ஏதேனும் தவறு தொடர்பில் அம்மாகாணத்தின் மாகாணப் பகுதியினால் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட குற்ற வழக்குத் தொடுப்புகளைப் பற்றி பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு அறிவிப்பது ஒரு மாகாணத்தின் பிரதிப் பொலிசு பரிசோதகர் தலைமை அதிபதிக்குள்ள கடமையாதல் வேண்டும்.

புலனாய்வுகளில் மாகாணப் பகுதிக்கு தேசிய பகுதி உதவுதல்.

14. ஏதேனும் மாகாணத்தின் பிரதான அமைச்சர் அவ்வாறு வேண்டுமிடத்து, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தேசிய பகுதியின் ஏதேனும் பிரிவை அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலுக்கான அட்டவணையின் I ஆம் பின்னிணைப்பில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் தவறைத் தடுப்பதிலும், கண்டுபிடிப்பதிலும், புலனாய்வு செய்வதிலும் அந்த மாகாணத்தின் மாகாணப் பகுதிக்கு உதவுமாறு பணித்தல் வேண்டும்.

நகரப் பொலிசுப் படை.

15. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் 1 ஆம் நிரலின் 1 ஆம் விடயத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையினால் குறித்துரைக்கப்பட்ட ஆள்புல எல்லைகள் தொடர்பாகப் பொலிசுத் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதையும் புரிவதையும் நிறைவேற்றுவதையும் பாதித்தலாகாது. அவை பொலிசுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பொலிசுப் படையின் அலுவலர்களினால் தொடர்ந்தும் பிரயோகிக்கப்படுதலும், புரியப்படுதலும், நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

16. (1) மாகாணமொன்றின் மாகாணப்பகுதி, பொலிசு மா அதிபர் அங்கிகாரத்துடன் வேறு மாகாணத்துக்கெனத் தாபிக்கப்பட்ட மாகாண சபை தீர்மானம் மூலம் அத்தகைய மாகாணப் பகுதியை அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் அளித்திருக்குமிடத்து, அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் வரையறைகளுக்கமையவாக அத்தகைய வேறு ஏதேனும் மாகாணத்தில் அதன் தத்துவங்களையும் நியாயாதிக்கத்தையும் பிரயோகிக்கலாம். மாகாணத்துக்கு வெளியே மாகாணப் பகுதியினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்கள்.

(2) மாகாணமொன்றின் மாகாணப்பகுதியின் அலுவலர் ஒருவர்.—

(அ) ஆணைப்பத்திரம் இல்லாது எவ்வாளைக் கைதுசெய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் எவரையும் ஆணைப்பத்திரம் இல்லாது கைதுசெய்யும் நோக்கத்துக்காக இலங்கையின் எந்த இடத்திலும் அத்தகைய ஆளைப் பின்தொடர்ந்து சென்று கைது செய்யலாம் ;

(ஆ) அத்தகைய அலுவலர் சார்ந்துள்ள மாகாணத்திற்குள்ளாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ புரியப்பட்ட தவறொன்று தொடர்பில் ஏதேனும் புலனாய்வு செய்யும் நோக்கத்துக்காக வேறேதேனும் மாகாணத்தின் பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்குத் தோதான பணிப்புரைகளை வழங்க வேண்டியவரான பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதியின் முன் அங்கிகாரத்துடன் அத்தகைய வேறு ஏதேனும் மாகாணத்தில் தமது தத்துவத்தையும் நியாயாதிக்கத்தையும் பிரயோகிக்கலாம்,

17. மாகாணமொன்றில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தியதன் மேல் அந்த மாகாணத்தின் மாகாணப்பகுதி, பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதியால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது, தவறுகளைப் புலனாய்வு செய்வதில் தேசிய பகுதிக்கு உதவுதல் வேண்டும். மாகாணப் பகுதி தேசிய பகுதிக்கு உதவுதல்.

18. பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதி இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் எழக்கூடிய எவையேனும் இடர்ப்பாடுகளை அகற்றும் நோக்கத்துக்காக அவசியமானதென அல்லது உசிதமானதென அவருக்குத் தோன்றக்கூடியதும் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராதனவுமான அத்தகைய நிர்வாகப் பணிப்புரைகளைக் கொடுக்கலாம். எந்தப் பகிரங்க அலுவலருக்கு இப்பிரிவின்கீழ் பணிப்புரை வழங்கப்பட்டதோ அந்த எவரேனும் பகிரங்க அலுவலர் அதற்கு இணங்கியொழுகுவது அவரது கடமையாதல் வேண்டும். பணிப்புரைகளை வழங்குவதற்குள்ள தத்துவம்.

19. மாகாணமொன்றின் பிரதான அமைச்சர் அம்மாகாணத்தின் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தொடர்பில், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தொடர்பாக அமைச்சர் பிரயோகிக்கக்கூடிய தத்துவங்களை விஞ்சாதனவான அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் : மாகாணத்தின் பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தொடர்பில் பிரதான அமைச்சருக்குள்ள தத்துவங்கள்.

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பிரதான அமைச்சர் ஒரு மாகாணத்தின் பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு பணிப்பொன்றை விடுக்குமிடத்து, அத்தகைய பணிப்பு எழுத்திலிருத்தல் வேண்டும்.

ஒவ்வாமை காணப்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

20. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

***பாராளுமன்றத்தின்*** *சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா* **(உள்நாடு)** *ரூபா* ***177 ; (வெளிநாடு)*** *ரூபா 236 ;* **ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான** *சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க* **வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற** *விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*